## மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் - பகுதி 02 - 2019

மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டு நிகழ்சித்திட்டம் - பகுதி 02 இன் 2019 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீதான கணக்காய்வு இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசிற்கும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2018 மே 18 ஆம் திகதிய 3625-(எஸ்ஆர்ஜ) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 4.02(அ) உறுப்புரை மற்றும் 3626-(சீஓஎல்) ஆம் இலக்க கடன் உடன்படிக்கையின் 4.02(அ) உறுப்புரை என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கிணங்க எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டது.

### 1.2 செயற்திட்டத்தின் அமுலாக்கம், நோக்கங்கள், நிதியளிப்பு மற்றும் காலப்பகுதி

நிகழ்ச்சித்திட்டத்தின் கடன் உடன்படிக்கையின் பிரகாரம், மகாவலி, விவசாயம், நீர்ப்பாசனம் மற்றும் கிராமிய அபிவிருத்தி அமைச்சு நிகழ்ச்சித்திட்டத்தின் நிறைவேற்றல் முகவராக உள்ளதுடன் இலங்கை மகாவலி அதிகாரசபை மற்றும் நீர்ப்பாசனத் திணைக்களம் என்பன நிகழ்ச்சித்திட்டத்தின் அமுலாக்கல் முகவர்களாக உள்ளன. நிகழ்ச்சித்திட்டப் பகுதிகளில் விவசாயம் மற்றும் குடிநீர் நோக்கங்களிற்காக நீர் வளங்களை பாதுகாப்பாக அணுகுதல் நிகழ்ச்சித்திட்டத்தின் நோக்கங்களாகும். கடன் உடன்படிக்கையின் பிரகாரம் நிகழ்ச்சித்திட்டத்தின் மதிப்பிடப்பட்ட மொத்தக் கிரயம் ரூபா 43,734 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 242 மில்லியனானதுடன் அதில் ரூபா 37,951 மில்லியனிற்கு சமமான ஐ.அ.டொலர் 210 மில்லியன் ஆசிய அபிவிருத்தி வங்கியால் நிதியளிக்கப்படுவதற்கு உடன்பாடு காணப்பட்டது. ரூபா 5,783 மில்லியன் மிகுதி தொகை இலங்கை அரசாங்கத்தால் நிதியளிக்கப்படுவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. நிகழ்ச்சித்திட்டம் அதன் நடவடிக்கைகளை 2018 யூலை 23 இல் ஆரம்பித்திருந்ததுடன் 2021 திசெம்பர் 31 அளவில் பூர்த்திசெய்யப்பட வேண்டுமென பட்டியலிட்டிருந்தது.

### 1.3 அபிப்பிராயம்

செயற்திட்டத்தின் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க இணைக்கப்பட்டுள்ள நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.4 அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.5 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை பொதுத்துறைக் கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

செயற்திட்டத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

## 1.6 நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள்

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி செயற்திட்டத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

எனது கணக்காய்வின் போது என்னால் இனங்காணப்படுகின்ற உள்ளகக் கட்டுப்பாடுகளிலுள்ள ஏனைய விடயங்களிற்கிடையேயான ஏதாவது முக்கியமான குறைபாடுகள் உள்ளடங்கிய முக்கியமான கணக்காய்வுக் காண்புகள் தொடர்பாக ஆளுகையுடன் தொடர்புபடுத்தப்பட்டவைகளை நான் தெரிவிக்கின்றேன்.

## 2. சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடன் இணங்காமை

| சட்டங்கள், விதிகள் மற்றும் பிரமாணங்களுடனான தொடர்பு | இணங்காமை/ கணக்காய்வு விடயம் | விளைவு | முகாமைத்துவத்தின் பதில் | கணக்காய்வாளரின் பரிந்துரை |
|---|---|---|---|---|
| 01/2019 ஆம் இலக்க முகாமைத்துவ சேவைகள் சுற்றறிக்கையின் 2.3.2 மற்றும் 2.3.3(இ) பந்தி | வினைத்திறனான செயற்திட்ட முகாமைத்துவத்தை உறுதிப்படுத்தும் பொருட்டு முழுநேர அடிப்படையொன்றில் செயற்திட்டப் பணிப்பாளர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட வேண்டும். மேலும் மேற்படி சுற்றறிக்கையின் 2.3.3(இ) பிரிவின் பிரகாரம் உத்தியோகத்தர் ஒருவர் ஒன்றுக்கு மேற்பட்ட செயற்திட்டத்தில் வழங்கப்பட்ட காலப்பகுதியொன்றில் சேவையாற்ற முடியாத போதிலும் மொறகஹகந்த செயற்திட்டத்தின் செயற்திட்ட பணிப்பாளர் பதிற்கடமை அடிப்படையில் மேல் எலஹர செயற்திட்டத்தின் செயற்திட்டப் பணிப்பாளராக நியமனம் செய்யப்பட்டிருந்தார். | செயற்திட்ட நிர்வாகப் பிரச்சனை ஏற்பட முடிவதுடன் செயலாற்றல் குறைவடையக் கூடும். | மொறகஹகந்த செயற்திட்டம் பூர்த்தியடைதலை நெருங்கியுள்ளதுடன் மொறகஹகந்த மற்றும் மேல் எலஹர செயற்திட்ட அலுவலகங்கள் மிகவும் அருகில் அமைந்திருந்தன. மொறகஹகந்த செயற்திட்டம் பூர்த்தியடைந்த பின்னர் மேல் எலஹர செயற்திட்டத்தில் முழுநேர அடிப்படையில் அவரால் செயற்பட முடியும். மேலும் மேல் எலஹர செயற்திட்டத்தின் செயற்திட்டப் பணிப்பாளரின் நியமனம் பிஎஸ்2 மட்ட பதவிநிலை ஒன்றாகும். நிகழ்ச்சித்திட்டமானது செயற்திட்டப் பணிப்பாளர் நியமனத்திற்காக எம்எஸ்டி அங்கீகாரத்தை கோரியிருந்தது. எம்எஸ்டி பதிலின் பிரகாரம் நடவடிக்கைகள் | நிகழ்ச்சித்திட்டம் சுற்றறிக்கை வழிகாட்டல்களை பின்பற்ற வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | | | எடுக்கப்படும். அத்துடன் இப் பிரச்சனை தீர்க்கப்படும் வரை எம்எஸ்டபிள்யூஜபி ஆல் அவரது பதிற்கடமை சம்பளக் கொடுப்பனவு ஏற்கனவே நிறுத்தப்பட்டிருந்தது. |

**3. ஒப்பந்த நிர்வாகம்**

| கணக்காய்வு விடயங்கள் | விளைவுகள் | முகாமைத்துவத்தின் பதில்கள் | கணக்காய்வாளரின் பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) களுகங்கை மற்றும் மொறகஹகந்த நீர்த்தேக்க இணைப்பு சுரங்கப்பாதை நிர்மாணத்தின் எதிர்பார்க்கப்பட்ட பௌதீக செயன்முன்னேற்றம் 51 சதவீதமாக காணப்பட்ட போதிலும் 2019 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 28 சதவீத பௌதீக செயன்முன்னேற்றம் மாத்திரமே அடையப்பட்டிருந்தது. மேலும் சுற்றாடல் பாதுகாப்பிற்கான ஒப்பந்ததாரரின் பங்களிப்பு மிகக் குறைவாக காணப்பட்டதன் காரணமாக மேற்படி ஒப்பந்தம் தொடர்பான சுற்றாடல் தாக்கத்தை இழிவுபடுத்துவதற்கு ஒதுக்கீடு செய்யப்பட்ட ரூபா 15.3 மில்லியன் தொகையில் ரூபா 0.7 மில்லியன் தொகை மாத்திரமே பயன்படுத்தப்பட்டிருந்தது. | முற்பணங்களை தவறாக பயன்படுத்துவதற்கான சாத்தியம் | எடுத்துக்காட்டு விடயம் இணங்கப்பட்டுள்ளது. 2020 மே மாத இறுதியளவில் பௌதீக செயன்முன்னேற்றம் 35 சதவீதமாக உள்ளது. நிகழ்ச்சித்திட்டத்தை துரிதப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. குறைத்தல் மற்றும் சீர்செய்தல் நடவடிக்கைகளிற்காக வரிசை முகவர்களிடமிருந்து (வன பரிபாலன திணைக்களம்/ வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களம்) பரிந்துரைகள்/ அங்கீகாரங்களை பெற்றுக்கொள்வதில் தாமதமொன்று ஏற்பட்டிருந்தது. | நிர்மாண வேலைகளை அமுல்ப்படுத்துவதிலுள்ள எதிர்பார்க்கப்படாத தாமதங்களை இழிவுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும். |

| | | | | |
|---|---|---|---|---|
| (ஆ) | மகாவலி நீர் பாதுகாப்பு முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் - பகுதி 02 இன் கடன் உடன்படிக்கை 2018 ஆம் ஆண்டில் கைச்சாத்திடப்பட்டிருந்தது. என்டபிள்யூபிசீ-ஐசீபீ – 01 மற்றும் யூஈசீபி-ஐசீபீ – 02ஏ ஒப்பந்த வேலைப் பொதிகள் இரண்டு ஆண்டுகள் கடந்திருந்த போதிலும் மீளாய்வாண்டின் இறுதியில் வழங்கப்பட்டிருக்கவில்லை. மேலும் மேற்படி ஒப்பந்த வேலைப் பொதிகள் தொடர்பாக எந்தவொரு பௌதீக செயன்முன்னேற்றமும் அடைந்து கொள்ளப்பட்டிருக்காததால் ரூபா 81 மில்லியன் தொகையான வட்டி மற்றும் கடப்பாட்டுக் கட்டணங்கள் கடன்வழங்கும் முகவரால் அறவீடு செய்யப்பட்டிருக்கவில்லை. | சிக்கனமற்ற செலவினம் அதிகரித்திருந்தது. | எடுத்துக்காட்டு விடயம் இணங்கப்பட்டுள்ளது. என்டபிள்யூபிசீ-ஐசீபீ – 01 ஒப்பந்தம் 2020 ஆம் ஆண்டின் 3 ஆவது காலாண்டில் வழங்கப்படுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. | கடன் உடன்படிக்கையின் பிரகாரம் நிர்மாண வேலை அமுல்ப்படுத்தப்பட வேண்டும். |
| (இ) | 2020 சனவரியில் இடம்பெற்ற ஏடிபீ உதவியாளர் நினைவுகள் கூட்டத்தின் பிரகாரம் நிகழ்ச்சித்திட்டத்தின் நிர்மாணங்களிலுள்ள தாமதங்கள் காரணமாக மொத்த மதிப்பிடப்பட்ட கிரயம் ஐ.அ.டொலர் 675 மில்லியனிலிருந்து ஐ.அ.டொலர் 947.3 மில்லியன் வரை 40 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. ஆகையால் கிரயத்தை குறைப்பதற்காக யூஈசீபி-ஐசீபீ – 5 மற்றும் என்டபிள்யூபிசீ-ஐசீபீ – 3 | நிகழ்ச்சித்திட்டக் கிரயத்தின் மிகையான ஓட்டம் மற்றும் நிகழ்ச்சித்திட்டத்தின் எதிர்பார்க்கப்பட்ட நலன்கள் இழிவாக்கப்பட முடியும். | எடுத்துக்காட்டு விடயம் இணங்கப்பட்டுள்ளது. நிகழ்ச்சித்திட்டத்தின் தற்போதைய கிடைக்கக்கூடிய நிதிகள் ஐ.அ.டொலர் 561 மில்லியன் தொகை மாத்திரமேயாகும். எதிர்பார்க்கப்பட்ட இணை நிதியளிப்பு கிடைக்கப் பெற்றிருக்கவில்லை. கிடைக்கக்கூடிய நிதிகளுடன் நிகழ்ச்சித்திட்டத்தை மீளக் | அனைத்து ஒப்பந்தப் பொதிகளும் அங்கீகரிக்கப்பட்ட நிகழ்ச்சித்திட்ட கிரய மதிப்பீட்டில் அமுல்ப்படுத்தப்பட வேண்டும். |

ஒப்பந்த வேலைப் பொதிகள் கட்டம் I இலிருந்து அகற்றப்பட்டு கட்டம் II இல் உள்ளடக்கப்படுவதற்கு முன்மொழியப்பட்டிருந்தது. எனினும் கட்டம் I இலிருந்து மேற்படி 2 ஒப்பந்த வேலைப் பொதிகளை அகற்றுவதன் விளைவு நிகழ்ச்சித்திட்டத்தால் மதிப்பீடு செய்யப்பட்டிருக்கவில்லை.

கட்டமைப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது. அமைச்சரவைப் பத்திரம் நிகழ்ச்சித்திட்டத்தை மீளப் பட்டியலிடுவதற்கான அங்கீகாரத்தை பெற்றுக்கொள்வதற்காக சமர்ப்பிக்கப்படும்.